[1992 மார்ச் 12

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு கட்டப்படுவதைத் தடுப்பதற்கு சட்டத்திலே விதி இருக்கிறது, இதுபற்றி அரசு பரிசீலனை செய்து இப்படிப்பட்ட நிலைமைகள் மீண்டும் வராமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 191, திரு. டி. எம். ரங்கராஜன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

191—

நெல் விலை.

*104—திரு. டி. எம். ரங்கராஜன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர், திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மற்ற மாவட்ட விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அதே விலை நெல்லுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, நெல்லுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறதோ அதே விலைதான் தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்ற மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு விவசாயி தான் உற்பத்தி செய்கின்ற நெல்லை ஓப்பன் மார்க்கெட்டிலே விற்க முடியும். ஆனால், தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயிகள் அவ்வாறு விற்பனை செய்ய முடியாததால் குறைந்த விலையைத்தான் பெற முடிகிறது. இதனைத் தவிர்த்திட அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மூல வினாவில் அதே விலை கொடுக்கப்படுமா என்று கேட்டு இருக்கிறீர்கள். அதே விலைதான் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

1992 மார்ச் 12]

அதிலே மேற்கொண்டு கேள்விக்கு இடமே இல்லை, மேலும் விலை கூட்டிக் கொடுக்கப்படுமா என்று நீங்கள் கேள்வி கேட்டிருக்க வேண்டும், நீங்கள் கேட்டது துணைக் கேள்வியாகாது,

வினா எண் 192, திரு. ம. சின்னசாமி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

192

விவசாயிகள் பொருளாதார முன்னேற்றக்கழகம்

*245—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளின் விளைபொருட்களை அரசே கொள்முதல் செய்து விற்கவும், விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யவும் தனி வாரியம் (Farmers Economic development Corporation) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயிகளின் விளைபொருள்களை அரசே கொள்முதல் செய்யவும், விற்பனை செய்வதற்குமான செயற்குறிப்பு அரசினுடைய ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது'' என்று பழமொழி இருக்கிறது. ஆகவே, விவசாயம் செய்கின்றவர்களுக்கு எந்தவித நன்மையும் இல்லாத காரணத்தினாலே பலபேர் 4 ஏக்கர் நிலம் கிராமத்திலே வைத்திருப்பதை விட நகரத்திற்குச் சென்று ஒரு பெட்டிக்கடை வைத்து பிழைத்துக்கொள்ளலாம் என்று நினைத்து ஏராளமானவர்கள் நகரத்திற்குச் சென்று விடுகிறார்கள். ஆகவே. விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற வகையில் ஒரு சிந்தனை இன்றைக்கு அரசுக்கு ஏற்படவேண்டும். அப்படி ஏற்படுகின்றபோது விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன், விளைச்சலிலே விளையும் பயிர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய கொள்முதல் விலை ஆகிய அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டால்தான் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படும். ஆகவே, அதற்கு ஒரு தனி வாரியம் அமைக்கப்படுமா? இப்போது இல்லையென்றாலும் மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.